ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

தினமணி
செவ்வாய்க்கிழமை, 3 நவம்பர் 2026

ஞாயிறுக்கிழமைதோறும்
தினமணியுடன்...
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!
படியுங்கள்

தங்கம் பவுனுக்கு ரூ.360 உயர்வு

சென்னை, நவ. 2: சென்னையில் ஆபரணத் தங்கம் விலை பவுனுக்கு ரூ.360 உயர்ந்து, ரூ.1,02,200-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலகளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையிலான மோதலின் தாக்கம் உலகப் பொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்கம் விற்பனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, தங்கம் விலை சந்தையில் ஏற்ற, இறக்கத்துடன் விற்பனையாகிறது. இந்தச் சூழலில் கடந்த சனிக்கிழமை (அக். 31) தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,480 குறைந்தது குறிப்பிடத்தக்கது. திங்கள்கிழமை காலை வர்த்தகம் தொடங்கியதும் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.45 உயர்ந்து, ரூ.12,775-க்கும், பவுனுக்கு ரூ.360 உயர்ந்து, ரூ.1,02,200-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.200-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2 லட்சத்துக்கும் விற்பனையானது.

புதுக்கோட்டையில் முதல்வர் விஜய் சாலைவலம்



புதுக்கோட்டையில் திங்கள்கிழமை சாலையோரம் திரண்டிருந்த பொதுமக்களை நோக்கி கையசைத்த முதல்வர் ஜோசப் விஜய்.

புதுக்கோட்டை, நவ. 2: திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வரை முதல்வர் ஜோசப் விஜய் திங்கள்கிழமை சாலை வலம் மேற்கொண்டார்.

சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் காலை 10.45 மணிக்கு திருச்சி வந்த அவர் சாலை வழியாக வேனில் புதுக்கோட்டைக்கு புறப்பட்டார். வழிநெடுகிலும் சாலையோரம் திரண்டிருந்த தவெகவினரும் பொதுமக்களும் முதல்வரை நோக்கி கையசைத்து உற்சாகவரவேற்பளித்தனர். சில இடங்களில் முதல்வர் விஜய் வேனின் மேல் பகுதிக்குச் சென்று தவெகவினரையும் பொதுமக்களையும் பார்த்து கையசைத்தபடி சென்றார். விராலிமலை சட்டப்பேரவை தொகுதிக்குள்பட்ட மாத்தூர், மண்டையூர், களமாவூர், கீரனூர் பகுதிகளில் கலை நிகழ்ச்சிகளுடன் கட்சியினரும், பொதுமக்களும் சிறப்பான வரவேற்பளித்தனர்.

முதல்வர் தலைமையில் வன விலங்கு வாரியம் மறுசீரமைப்பு

சென்னை, நவ.2: தமிழ்நாடு மாநில வன விலங்கு வாரியத்தை முழுமையாக மறுசீரமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

முதல்வர் ச.ஜோசப் விஜய் தலைமையில் மறுசீரமைக்கப்பட்டுள்ள இந்த வாரியத்தில் துணைத் தலைவராக வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ரஞ்சித் குமார், உறுப்பினர்களாக எம்எல்ஏக்கள் எம். சுதாகர் (காட்பாடி), எஸ். கார்த்திகேயன் (மதுரை கிழக்கு), எம். ஆர். பல்லவி (திரு.வி.க. நகர்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

வனத்துறை வல்லுநர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வாரியத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நொய்டாவை சேர்ந்த இந்திய வனவிலங்கு அறக்கட்டளையின் ஜோஸ் லூயிஸ், மைசூரைச் சேர்ந்த இயற்கைப் பாதுகாப்பு அறக்கட்டளையின் மூத்த விஞ்ஞானி டாக்டர் டி.ஆர். சங்கர ராமன், தஞ்சாவூரைச் சேர்ந்த ஓம்கார் அறக்கட்டளையின் பாலாஜி வேதராஜன், வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநர், அசோகா சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் அனிதா அர்ஜுன்தாஸ், சென்னை கடல்சார் ஆமை பாதுகாப்பு வலையமைப்பின் நிர்வாக அறங்காவலர் வி. அருண், சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் இந்திய நாட்டுப் பிரதிநிதி டாக்டர் யஷ் வீர் பட்நாகர், பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தின் இயக்குநர் டாக்டர் கிஷோர் ரிதே, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறைத் தலைவர் டாக்டர் சி. ஸ்ரீ குமார் ஆகியோரும் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களின் பிரதிநிதிகளும் அரசுத் துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் வாரியத்தின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் வனவிலங்குகள் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டிய இடங்களைத் தேர்வு செய்தல், கொள்கைகளை வகுத்தல் ஆகியவற்றை இந்த வாரியம் உருவாக்கும்.

பஞ்சாப்: ஆம் ஆத்மி அதிருப்தி எம்எல்ஏக்கள் மூவர் பாஜகவில் ஐக்கியம்

புது தில்லி, நவ. 2: பஞ்சாபில் ஆளும் ஆம் ஆத்மி கட்சியின் அதிருப்தி எம்எல்ஏக்கள் மூவர் பாஜகவில் திங்கள்கிழமை இணைந்தனர்.

பஞ்சாபில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இது ஆம் ஆத்மிக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது.

தேர்தல் நெருங்கி வருவதால் பஞ்சாபில் அரசியல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. அந்த மாநிலத்தில் காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியாக உள்ளது. பாஜக-சிரோமணி அகாலி தளம் கட்சிகள் கூட்டணி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மும்முனைப் போட்டிக்கு பஞ்சாப் தயாராகி வருகிறது.

இந்நிலையில், பஞ்சாபைச் சேர்ந்த ஆம் ஆத்மி அதிருப்தி எம்எல்ஏக்கள் சேத்தன் சிங், ஹர்மீத் சிங், குன்வர் விஜய் பிரதாப் சிங் ஆகியோர் தில்லியில் பாஜக தலைமையகத்தில் மூத்த தலைவர்கள் முன்னிலையில் பாஜகவில் இணைந்தனர்.

இதில் குன்வர் விஜய் பிரதாப் சிங் ஏற்கெனவே ஆம் ஆத்மியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி. சேத்தன் சிங், ஹர்மீத் சிங் ஆகியோர் ஆம் ஆத்மியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை விலகினர். அடுத்த நாளிலேயே தங்கள் ஆதரவாளர்களுடன் பாஜகவில் இணைந்துள்ளனர்.

இணைப்பு நிகழ்ச்சியின்போது பாஜக தேசிய பொதுச் செயலரும், பஞ்சாப் பாஜக பொறுப்பாளருமான சதீஷ் பூனியா, இணைப் பொறுப்பாளர் வீரேந்திர சச்தேவ், பஞ்சாப் மாநில பாஜக தலைவர் கேவல் சிங் தில்லான் ஆகியோர் உடன் இருந்தனர். பாஜகவில் இணைந்தவர்களை வரவேற்றுப் பேசிய சதீஷ் பூனியா, 'பஞ்சாபில் வெற்றியை நோக்கிப் பயணிக்கும் பாஜக தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது. மாநிலத்தில் ஆளும் ஆம் ஆத்மி மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

போதைப் பொருள் கடத்தலும், பயன்பாடும் பஞ்சாபில் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. இதனால் இளைஞர்களின் எதிர்காலம் நாசமாகிறது. இது தவிர ஊழலும், குற்றச் செயல்களும் பஞ்சாபை சீர்குலைத்து வருகின்றன. பாஜக ஆட்சி அமைத்தும் 2029-ஆம் ஆண்டுக்குள் பஞ்சாபை போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்றுவோம் என உள்துறை அமைச்சர் அமித் ஷா ஏற்கெனவே உறுதியளித்துள்ளார்' என்றார்.

நவம்பர், டிசம்பரில் புதிய புயல்கள் தமிழகத்தை நோக்கி வரும்

வானிலை ஆய்வு மைய தென்மண்டலத் தலைவர் தகவல்

சென்னை, நவ.2: வங்கக்கடலில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் உருவாகவுள்ள புதிய புயல்கள் பெரும்பாலும் தமிழகம் நோக்கி வரும் என்று வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் வி.ஆர்.துரை தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: தென்மேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவிய முரசு புயல், வடமேற்கு திசையில் நகர்ந்து திங்கள்கிழமை காலை தீவிரப் புயலாக வலுவடைந்தது.

இது மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து, திங்கள்கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை (நவ.3) அதிகாலை 4 மணி வரையிலான இடைப்பட்ட நேரத்தில் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நெல்லூர் மற்றும் நரசாப்பூர் இடையே, ஓங்கோலுக்கு தெற்கே தீவிரப் புயலாக கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புயல் கரையை கடக்கும் போது, மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இதன் தாக்கத்தால் செவ்வாய்க்கிழமை (நவ.4) நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழைக்கும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை வாய்ப்புள்ளது. இந்த புயல் கரையை கடந்த பின்னர், தமிழகத்தில் மழையின் தாக்கம் படிப்படியாகக் குறைய வாய்ப்புள்ளது.

18% அதிகம்: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த அக்.1 முதல் நவ.1 வரை இயல்பாக 190 மி.மீ. மழை பெய்ய வேண்டும். ஆனால், நிகழாண்டு 220 மி.மீ. மழை அதாவது 18 சதவீதம் அதிகமாக மழை பதிவாகியுள்ளது.

அதேபோல், நவம்பர் மற்றும் டிசம்பரில் உருவாகும் புதிய புயல்கள் பெரும்பாலும் தமிழகம் நோக்கியே வரும். ஆகையால், இந்த மாதத்தில் தமிழகத்தில் பருவமழை இயல்பை விட அதிகமாக பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: புயல் எதிரொலியாக செவ்வாய்க்கிழமை (நவ.3) வட தமிழக கடலோரப் பகுதிகளில் மணிக்கு 80 கி.மீ. வேகத்திலும், வங்கக்கடலில் மணிக்கு 70 கி.மீ. வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும். இதில், வங்கக்கடலில் மாலை நேரத்தில் காற்றின் வேகம் படிப்படியாகக் குறைய வாய்ப்புள்ளது. எனினும், இப்பகுதிகளுக்கு மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

மழை அளவுகள்: தமிழகத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் சென்னை கடப்பாக்கம், பாரிஸ், மணலி தலா 150 மி.மீ. மழை பதிவானது. மேலும், சாத்தாங்காடு (சென்னை) - 130 மி.மீ., கத்திவாக்கம் (சென்னை), பேசின் பாலம் (சென்னை), எண்ணூர் (சென்னை), புழல் (சென்னை), விம்கோ நகர் (சென்னை), தண்டையார்பேட்டை (சென்னை), பாலாஜி நகர் (சென்னை), மாதவரம் (சென்னை)- தலா 110 மி.மீ., திருவொற்றியூர் (சென்னை) - 100 மி.மீ. மழை பதிவானது என்றார் அவர்.

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் நெருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்) / அடமானதார்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன்தார்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் கருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.	**திரு.S.அருண்குமார்,** த/பெ S.P. சுகுமார், பார்சன் செஸ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036. **திரு. S.P. சுகுமார்,** பார்சன் செஸ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036.	**திரு.S.அருண்குமாரின் சொத்து. அட்டவணை A :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, மதுக்கரை கிராமம், பட்டா எண்.422, சர்வேக் கள எண்.1004/25, இதில் மொத்தமுள்ள 2.79 ஏக்கரில், வடகிழக்குப் பகுதி 0.96 ¼ ஏக்கர் அமைந்த எல்லைகள் விபரம்: தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சர்வே எண்.1004/2 ல் உள்ள 0.80 ¾ ஏக்கர் நிலச் சொத்துக்கு வடக்கு, சர்வே எண்.997 ல் உள்ள நிலங்களுக்குத் தெற்கு, சர்வே எண்.1004/3 A ல் அமைந்த நிலச் சொத்துக்கு மேற்கு, சர்வே எண்.1004/2 ல் உள்ள தனபாலிற்குச் சொந்தமான நிலத்துக்கு மற்றும் தனபாலால் விடப்பட்ட 30 அடி அகல வண்டித் தடத்துக்குக் கிழக்கு. அதனோடான வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்சொன்ன சர்வேக் களத்தில் மேற்படி பகுதியிலுள்ள, தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துப் பகுதியின் வழியே செல்லும் 30 அடி அகல வண்டித் தடத்தில் உரிமை மற்றும் அங்குள்ள பிற பாத்தியதைகளுடன். இச்சொத்து சர்வே எண்.1004/2 B ல் மதுக்கரை பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது. **அட்டவணை B :** மொத்தமுள்ள அட்டவணை A சொத்தில் 291.05 சதுரடி பிரிபடாத பங்கு நிலம். **அட்டவணை C :** "சாய்தான் என்கிளேவ்" என்றழைக்கப்படுகிற கட்டிடத்தின், B பிளாக்கில், அபார்ட்மெண்டின் முதல் தளத்திலுள்ள மொத்தம் 658.79 சதுரடி சிறப்புக் கட்டுமானப் பரப்பு கொண்ட, ஃப்ளாட் எண். B1-1, பொதுப் பகுதிகளில் உரிமை மற்றும் ஒரு வாகன நிறுத்துமிடத்துடன்.	நிலுவைத் தொகை : 04.10.2026 தேதியன்று, ரூ.40,66,356/- (ரூபாய் நாற்பது லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	23.11.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.20,50,000/- 2. ரூ.2,05,000/- 3. ரூ.50,000/-	கொள்நிலை (Physical) சுவாதீனம்	21.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
2.	**M/s. இன்னோவ் இம்பெக்ஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திரு. P. பிரபு மற்றும் திரு. கார்த்திக், எண்.7/1, புத்தூரான் தோட்டம், சாமுண்டிபுரம், திருப்பூர் – 641 603. **திரு. P. பிரபு (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. கார்த்திக் (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. பழனிசாமி (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்) (காலஞ்சென்றவர்) திருமதி. பூங்கொடி, க/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர், திரு. கார்த்திக், த/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர், திரு. பிரபு, த/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607.	**திரு. P. பிரபு மற்றும் திரு. P. கார்த்திக் (பங்குதாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள்) ஆகியோரின் சொத்து. ஆவண எண்.1450/2004 ன்படி.** திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, தற்போது திருப்பூர் வடக்கு தாலுகா, தொட்டிபாளையம் கிராமம், பொது சர்வே எண்.203/2 ல் உள்ள 1.13 ஏக்கர் தீர்வை ரூ.1.55, இதில் விற்பனையாளர்கள் குமாரசாமி மற்றும் அய்யாசாமி ஆகியோரால் தடத்திற்கென்று நிலங்கள் விடப்பட்டது கழிபட்டதில், மீதமுள்ள 0.93 ஏக்கர் நிலத்தின் எல்லைகள் விபரம்: 37 விங்குகள் கிழமேல் தடத்துக்குத் தெற்கு, நல்லாறு புறம்போக்கிற்கு வடக்கு, 37 விங்குகள் தென்வடல் தடத்துக்குக் கிழக்கு, பொது சர்வே எண்.203/3 ல் உள்ள நிலங்களுக்கு மேற்கு, இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள மேற்குறிப்பிட்ட நிலம் 0.93 ஏக்கர் முழுமையும், 37 விங்குகள் கிழமேல் மற்றும் தென்வடல் தடத்தில் வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்குறிப்பிட்ட நிலங்களுக்குண்டான வழக்கமான வழித்தடத்தில் மற்றும் வண்டித்தடத்தில் உபயோக உரிமைகளுடன் மற்றும் அனைத்து வசதிகளில் உரிமைகளுடன்.	நிலுவைத் தொகை : 30.09.2026 தேதியன்று, ரூ.1,32,21,913/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு லட்சத்து இருபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்துப் பதின்மூன்று மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	23.11.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.2,51,10,000/- 2. ரூ.25,11,000/- 3. ரூ.1,00,000/-	கொள்நிலை (Physical) சுவாதீனம்	21.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
3.	**M/s.ஜடியல் சிலிகான் அண்ட் ஸ்டாம்பிங்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : திரு.ரஃபியுல்லா.M மற்றும் திரு.அஸ்ரஃப் அலி கான்,** எண்.40, வேல்முருகன் நகர், விநாயகாபுரம், கோயம்புத்தூர் – 641 035. **திரு.ரஃபியுல்லா.M (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ.திரு.முகமது யாகூப், எண்.101, கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 641 006. **திரு.அஸ்ரஃப் அலி கான்.A (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ.திரு.அப்துல் அஜீஸ்கான், எண்.49/51, உடுமலைப்பேட்டை ரோடு, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 001. **திரு.அப்துல் அஜீஸ்கான்.A (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** த/பெ.P.F.அகமது அலிகான் சாய்பு, எண்.49/51, உடுமலைப்பேட்டை ரோடு, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 001.	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, பொள்ளாச்சி டவுன், வார்டு எண்.5, டவுன் சர்வே எண்.814/2 பகுதி. இதிலுள்ள 1045 சதுரடி அல்லது 2 சென்ட் 174 சதுரடி கொண்ட வீட்டு மனையிடத்திற்கு **எல்லைகள் விபரம் :** வடக்கே – திரு.P.A.ஜம்ருத் கத்தூனுக்குச் சொந்தமான சொத்து, தெற்கே – திரு. மெஹபூஜ் ஜஹான் காத்தூனின் சொத்து, கிழக்கே – திரு. ஷான் கானின் சொத்து, டவுன் சர்வே எண்.814, மேற்கே – தென்வடல் தடம் (பொதுக் காலி நிலம்). இவ்வெல்லைகளுக்கிடையில், மேற்படி நிலத்தின் **அளவுகளாக,** கிழமேல் வடபுறமாக 54 அடி, கிழமேல் தென்புறமாக 59 அடி, தென்வடல் கிழபுறமாக 17 அடி, தென்வடல் மேற்புறமாக 20 அடி. அங்குள்ள கதவு எண்.49/51 கட்டிடத்துடன். மேற்படி சொத்து உத்தரவாதமளித்த திரு. A.அப்துல் அஜீஸ்கான் பெயரில் உள்ளது.	நிலுவைத் தொகை : 31.10.2026 தேதியன்று, ரூ.96,27,969.72 (ரூபாய் தொண்ணூற்று ஆறு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மற்றும் பைசா எழுபத்து இரண்டு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	23.11.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.38,00,000/- 2. ரூ.3,80,000/- 3. ரூ.50,000/-	கொள்நிலை (Physical) சுவாதீனம்	21.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
4.	**M/s. சஞ்சு எக்ஸ்போர்ட்ஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், 1) திரு. M.சிவகுமார், 2) திருமதி. S. ஜெயந்தி சிவகுமார், கதவு எண்.384/2, மனை எண்.5, காந்தி ரோடு, பெரியார் காலனி, அவிநாசி ரோடு அருகில் 15-வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 652. **திரு. M. சிவகுமார் (பங்குதாரர் : M/s. சஞ்சு எக்ஸ்போர்ட்ஸ், உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** த/பெ. முருகப்பன், கதவு எண்.384/2, மனை எண்.5, காந்தி ரோடு, பெரியார் காலனி, அவிநாசி ரோடு அருகில், 15-வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 652. **திருமதி. S. ஜெயந்தி சிவகுமார் (பங்குதாரர் : M/s. சஞ்சு எக்ஸ்போர்ட்ஸ் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** க/பெ. திரு. M. சிவகுமார், கதவு எண்.384/2, மனை எண்.5, காந்தி ரோடு, பெரியார் காலனி, அவிநாசி ரோடு அருகில், 15-வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 652.	திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை II சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, 15. வேலம்பாளையம் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள், அனுப்பர்பாளையம் புதூர், ஹவுசிங் யூனிட், வார்டு எண்.6, 15.வேலம்பாளையம் கிராமம், சர்வே எண்.430, இதில் வே.ஆவுட் அமையப்பெற்றதில், பிளானிலுள்ளபடியான மனை எண்.5 க்கு எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் : ராமநாதனுக்குச் சொந்தமான மனை எண்.4 சொத்துக்குக் கிழக்கு, ஹவுசிங் யூனிட்டிற்குச் சொந்தமான கட்டிடத்துக்குத் தெற்கு, மவுபூப் ஜஹானிற்குச் சொந்தமான மனை எண்.6 க்கு மேற்கு, கிழமேல் 30 அடி அகல ரோட்டுக்கு வடக்கு. இதில் அளவுகளாக, கிழமேல் இருபுறமும் 100 அடி, தென்வடலாக 60 அடி என 6000 சதுரடி மனையிடம், அதனோடான 20,400 சதுரடி மூன்றடுக்கு ஆர்சிசி கட்டிடம், கதவுகள், சன்னல்கள், குடிநீர் இணைப்பு, காப்புத் தொகைகளுடன். மின்வாரிய சர்வீஸ் இணைப்பு எண்.199, 405. திருப்பூர் தாலுகா எல்லைக்குட்பட்டு அமைந்துள்ள இச்சொத்து, முருகப்பன் மகன் திரு. M.சிவகுமாருக்குச் சொந்தமாயுள்ளது.	நிலுவைத் தொகை : 31.10.2026 தேதியன்று, ரூ.1,41,77,244.34 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒரு லட்சத்து எழுபத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	23.11.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.4,54,00,000/- 2. ரூ.45,40,000/- 3. ரூ.1,00,000/-	அடையாள (Symbolic) சுவாதீனம்	21.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விடயங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** -ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9538993885** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 02.11.2026
இடம் : கோயம்புத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by **N. Gopalan** on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. *ஆசிரியர்: கே. வைத்தியநாதன்* - **Editor: K.Vaidiyanathan** Coimbatore. Vol. **37**, No. **305**
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.